[4th August 1966

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : பெரிய தேவலாயங்களில் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய பாசுரங்கள் ஓதுகின்ற ஓதுவாமூர்த்திகளுக்குக் கொடுக்கின்ற சம்பளம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அதை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை காணுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் நேரடியாக வழிவகை காண முடியாது. ஆனால், அற நிலைய இலாக்காவினர் இதைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

ஸ்ரீரங்கம் தேவஸ்தானம்.

*** 65 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தில் சம்பிரதாயத்திற்கு விரோதமாக நிர்வாக அதிகாரியால் டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய விதிமுறைகள்.

*** 66 கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மக்கள் கிளர்ச்சி செய்யும்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதுபற்றிய விதி முறைகளை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. செ. மாதவன் : இந்த விதிமுறைகளை மாற்றுவதற்கு புதிய தொகுப்பு ஒன்றைச் சென்னையிலுள்ள கமிஷனர் வெளியிட்டது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? வெளியிடுவதற்கு முன்னால் அதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிஷனர் அவர்கள், தன்னுடைய அனுபவத்தையொட்டி, சொந்த அபிப்பிராயத்தைத் தான் தெரிவித்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய நிமித்தம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றபோது, முதல் தடவையாகப் பயமுறுத்துவதற்காகச் சுடப்படுகிற முறையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? அல்லது, எடுத்த எடுப்பிலேயே கொல்லுவதற்கு என்ற முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

4th August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விவரங்களையெல்லாம் அதிகமாக எடுத்துக் கூறுவதற்கில்லை. ஆனால், எடுத்த எடுப்பிலேயே கொல்லுவது என்ற நிமித்தம் அடியோடு கிடையாது.

திரு. செ. மாதவன் : துப்பாக்கியிலிருந்து வெளிவருகிற குண்டுகள் ஒன்றும் பயன்படாமல் போகக் கூடாது, ஒவ்வொரு குண்டுக்கும் ஒரு பிணம் வரவேண்டும் என்ற கருத்தைக் கமிஷனர் தெரிவித்தது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிஷனர் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அதை அரசாங்கம் ஆராய வேண்டிய நிமித்தம் இல்லை. ஏனென்றால், அது அவருடைய சொந்தக் கருத்து.

Police excesses.

* 67 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any petition from a member of the Assembly on 2nd February 1966 explaining police excesses in Velliankundram and Sakkudi villages in Madurai taluk; and

(*b*) if so, the action taken on it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : இதுபற்றி உள்துறை இலாகா செயலாளருக்கு மனு அனுப்பப்பட்டது. அந்த மனு பரிசீலனை செய்யப்பட்டதா ? விசாரணை செய்யப்பட்டதா ? அந்த மனுவின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தினிடம் தகவல் இல்லை என்று சொன்னேன். ஆனால், விசாரணை நடத்தப்பட்டது. விதிப்படி நடத்த வேண்டிய விசாரணை நடத்தப்பட்டு, அஸிஸ்டெண்ட் சூபரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் பேரில் செய்யப்பட்ட புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. செ. மாதவன் : உள்துறை இலாக்காச் செயலாளரிடம் நேராகவே கொண்டு சென்று கொடுக்கப்பட்டது. விசாரணை நடத்தியபோது, அங்கே உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை விசாரித்தார்களா ? கொடிக் கம்பம் ஒடிக்கப்பட்டது என்பதாவது அந்த விசாரணையிலிருந்து புலப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசாரிக்கப்பட்டது என்று சொன்னேன். இந்தச் சம்பவங்களைப் பற்றியெல்லாம் விசாரிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி, அசிஸ்டெண்ட் சூப்பரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் பேரில் செய்யப்பட்ட புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று ஏற்பட்டது என்றுதான் சொல்வேன்.